THE WORLD NEEDS THE WORD
IBT

ஆகஸ்ட் 2025
மலர் 23, இதழ் 11

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# கீழ்ப்படியாமையின் விளைவு



# கீழ்ப்படியாமையின் விளைவு

வேதாமகத்தின் முதல் கட்டளை கீழ்ப்படிதல். கீழ்ப்படிந்தால் அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளலாம். கீழ்ப்படிதலுக்கு எதிராகச் செயல்பட்டால் அநேக சாபங்கள் தான் நம்மை தொற்றிக் கொள்ளும். உபாகமம் 27 மற்றும் 28-ஆம் அதிகாரத்தில் பார்த்தால், கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்படிந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் கைக்கொள்ளாதே போனால் என்னென்ன சாபங்களும் வரும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இராஜாக்களின் காலங்களில் இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜாக்களின் கீழ்ப்படியாமையினால் அவர்களுடைய வாழ்க்கையிலும், தேசத்திலும் அநேக மாற்றங்கள் நடந்தன.

ஆதி 4 : 8 - காயீன் ஆபேலைக் கொலை செய்தான். இது கடவுளின் படைப்பின் அமைதியை தொந்தரவு செய்த ஒரு வன்முறைச் செயலாகும்.

ஆதி 19 - சோதோம் கொமோராவின் அழிவு :

கடவுள் சோதோம் கொமோராவை அவற்றின் பாவத்தினால் அழித்தார். இது கடவுளின் நீதியையும், அமைதியையும் மீறிய செயலாகக் காணப்பட்டது.

ஆகமங்களின் புத்தகம் - இஸ்ரவேல் மக்களின் கீழ்ப்படியாமை : இஸ்ரவேல் மக்கள் எத்தனையோ முறை கடவுளின் எண்ணத்திற்கும், திட்டத்திற்கும் வேறுபட்டவர்களாக நடந்தார்கள். கடவுளின் கோபத்திற்கும், அமைதியின்மைக்கும் வழிவகுத்தது.

கடவுள் நீதியுள்ளவர் மற்றும் அமைதியை விரும்புகிறவர் என்பதை வேதாகமம் நமக்கு கூறுகின்றது. நாம் கடவுளுக்கு கீழ்ப்படியும் போது, மற்றும் நீதியுடன் வாழும்போது, நாம் கடவுளின் அமைதியில் பங்கு கொள்ள முடியும்.

கீழ்ப்படிதல் இல்லாமல் மேல் படிக்குச் செல்ல முடியாது. ஒரு உயர்வு வேண்டுமானால் குறுக்கு பாதையில் சென்றால், அல்லது விளம்பரத்தின் மூலமாகச் செல்லும் போது, அழிவைத்தான் நாம் சந்திக்க நேரிடும். சிறிது காலத்திற்குத் தான் அது நிலை நிற்கும். நம் பிள்ளைகள் நமக்குக் கீழ்ப்படியாமல் போனால், உடனே நமக்கு கோபம் வந்து தண்டனை கொடுக்கிறோம். அதேபோல்தான் நம்முடைய பரம தகப்பனும், அவருக்குப் பிடிக்காத காரியத்தை நாம் செய்யும் போதும், நமக்குச் சொல்லும் ஆலோசனைக்கு எதிராக நாம் செயல்படும்போதும், நாம் அவருடைய தண்டனைக்கு ஆளாவோம்.

கீழ்ப்படியாமை என்பது ஒரு தொற்றுநோயாகும். ஏவாளிடமிருந்து ஆதாமுக்குப் போய் ஆதாமிடமிருந்து காயீனுக்குச் சென்றது. அதேபோல்தான் ஒரு ராஜாவிடமிருந்து இன்னொரு ராஜாவுக்கு தாவித் தாவிச் செல்லும் போட்டி, பொறாமை, நாட்டை விரிவுபடுத்துவதில் அநேக போர்க்களத்தைச் சந்தித்தல் போன்ற காரியங்களும் ஒரு வகையில் கீழ்ப்படியாமையாகும்.

கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி சாய்க்காமல் / கீழ்ப்படியாமல் போன மூன்று ராஜாக்களைக் குறித்தும், அவர்கள் செய்த தவறுகளைக் குறித்தும், அதனால் அவர்கள் அடைந்த தண்டனையைக் குறித்தும் இந்தச் செய்தியில் காணலாம்.

1. இஸ்ரவேலின் முதல் ராஜா
2. ஞானமுள்ள ராஜா
3. யூதாவின் ராஜா

மேலே குறிப்பிட்ட மூன்று ராஜாக்களைப் பற்றியும் நாம் நன்கு அறிவோம். அவர்கள் இஸ்ரவேல் நாட்டிற்கும், மக்களுக்கும் என்னென்ன

செய்தார்கள் என்றும், கர்த்தருக்கு விரோதமாக கீழ்ப்படியாமல் இருந்தார்கள் என்றும், அரசனாக அரியணை ஏறியதும் அவர்களுக்குள் வந்த மேட்டிமையையும் அறிந்து கொள்ளலாம்.

## *1. இஸ்ரவேலின் முதல் ராஜா*

கர்த்தர் சாமுவேலை நோக்கி : "நீ ஜனங்கள் சொல்லைக் கேட்டு அவர்களை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து" என்றார்.

ஆதியாகமம் புத்தகத்திலே மூன்று முற்பிதாக்கள் மற்றும் அவருடைய பிள்ளைகள் எல்லாம் தேவனுடைய பிரசன்னத்தில் (என்ன ஒரு பிரச்சனையாக இருந்தாலும்) தங்கள், தங்கள் காரியங்களைக் குறித்து ஆண்களும், பெண்களும் எதிர்கொண்டார்கள். யாரிடமும் எந்த மேட்டிமையோ, ஆணவமோ, பெருமையோ, வரம்பு மீறி செயல்படும் துணிச்சலோ காணப்படவில்லை. காரணம், அவர்களை ஆளுகை செய்தது தேவன். எல்லோரும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்.

யாத்திராகமம் தொடங்கி உபாகமம் வரைக்கும் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து கானான் தேசத்துக்கு கொண்டு வர கர்த்தர் மோசே என்னும் விடுதலையாளரை தேர்ந்தெடுத்து அவன் மூலம் கர்த்தரின் துணை கொண்டு 40 வருட காலமாக மோசே, ஆரோன், மிரியாம், யோசுவா போன்றோர்களுக்கு நல்ல ஆலோசனை மற்றும் பொறுமையைக் கொடுத்து ஆளுகை செய்து வந்தது தேவன்.

அதன்பின், நியாயாதிபதிகள் காலம் வந்தது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற பழமொழிக்கேற்ப (அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை) அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிபோனபடி எந்த ஒரு நிர்வாகமும் இல்லாமல் செய்து வந்தான். அதன்பிறகு இஸ்ரவேல் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற கர்த்தர் சாமுவேலிடம் ஒரு ராஜாவை ஏற்படுத்துமாறு கூறினார்.

## *யார் ? இந்த சவுல்*

பென்யமீன் குலத்தானாகிய கீஸ் என்பவரின் மகன் சவுல். இஸ்ரவேல் புத்திரரில் சவுலைப் பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை. எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். சாமுவேல் தீர்க்கதரிசி, மற்றும் ஜனங்கள் எல்லோரும் கில்காலுக்குப் போய் சவுலை ராஜாவாக ஏற்படுத்தினர்.

ஜனங்களுக்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலின் முதல் ராஜா, சவுல்.

தேவனுடைய போர்களை நடத்தினவன். மோவாபியர் அம்மோன்புத்திரர், ஏதோமியர், சோபாவின் ராஜாக்கள் மற்றும் பெலிஸ்தியர்களோடு போரிட்டு வெற்றி பெற்றான்.

## *கீழ்ப்படியாத இஸ்ரவேலின் ராஜா*

சாமுவேல் சவுலை நோக்கி, *"இப்போதும் நீ போய் அமலேக்கை மடங்கடித்து... சங்கரித்து... கொன்று போடக்கடவாய் என்கிறார்"* என்று சொன்னான் (1 சாமு. 15 : 3).

போரிலே அமலேக்கியரை வெற்றிக்கொண்டு, அமலேக்கியரின் ராஜாவை உயிரோடே பிடித்தான். ஜனங்கள் எல்லோரையும் பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணினான்.

ஆனால், போரிடச் சென்ற ஜனங்கள் சவுலின் உத்தரவின் பேரில், முதல் மற்றும் இரண்டாம் தரமான ஆடு, மாடுகளை தப்பவிட்டு, தன் நாட்டிற்குக் கொண்டு வந்தனர்.

யாக். 2 : 10-இல் கீழ்ப்படியாமையைக் குறித்து ஒரு வசனம் எழுதுகிறார்.

*"... ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்."*

கர்த்தரின் கட்டளைகளில் நாம் விரும்பும் ஒரு பகுதியை மட்டும் கைக்கொள்வது கீழ்ப்படியாமையாகும். கர்த்தர் அழிக்கச் சொன்னவற்றை எடுத்துக் கொண்டதால் ஆகானுக்கு மரண தண்டனை கிடைத்தது (யோசு. 7 : 25).

சவுலை ராஜாவாக்கினதற்கு கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். சவுல் கீழ்ப்படியாதது மட்டுமல்ல, தான் பெற்ற வெற்றிக்கு கர்த்தருக்கு மேன்மையை அளிக்காமல், தனக்கு புகழ் கிடைப்பதற்காக ஒரு வெற்றிக்கொடியை (ஜெய ஸ்தம்பம்) நாட்டினான். இதற்காக கர்த்தரும், சாமுவேலும் வருந்தினார்கள். நாமும் கீழ்ப்படியாமல் தவறு செய்யும் போது, கர்த்தரும் வருத்தப்படுகிறார்.

மனிதனைப் பொறுத்தவரை, தான் செய்வது சரி என்று தனக்குத்தானே எண்ணி, தன்னைத்தானே பலசமயங்களில் ஏமாற்றிக் கொள்கிறான். சவுல் தான் செய்த தவறுக்கு ஜனங்களைக் காரணம் காட்டி (1 சாமு 15 : 15) தப்ப முயலுகிறான்.

பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு. 15 : 22) என்று வேதத்தில் பல பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. அதனால் பலி தேவையில்லை என்ற அர்த்தம் கிடையாது. கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், கர்த்தரோடு நல்லுறவு கொள்ளாமல், ஆலயம் தவறாமல் செல்வதும், காணிக்கை செலுத்துவதும், கர்த்தரின் பார்வையில் பயனற்றதாகும்.

சாமுவேல் சவுலைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் புறக்கணித்தீர். நீர் இஸ்ரவேலின் மீது ராஜாவாய் இராதபடிக்கு கர்த்தர் உம்மையும் புறக்கணித்து தள்ளினார் என்றான் (1சாமு. 15 : 26).

சவுலின் அரசப் பதவி நீங்கும் என்பதைக் கர்த்தர் கூறினார். அவர் அதை மாற்றமாட்டார். மனம் மாற கர்த்தர் மனுஷன் அல்ல. சவுலினுடைய இருதயம் சரியாய் இல்லாதக் காரணத்தால் நம்முடைய தேவன் என்று கூறாமல், சாமுவேலிடம் உம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று கூறினான்.

சவுல் மனந்திருந்தி தன்னைக் கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி இருந்தால் கர்த்தர் மன்னித்திருப்பார். ஆனால், அதற்கு மாறாக ஜனங்களின் முன்பாக மேன்மை பெற எண்ணினார். மனம் திரும்பாதவனின் பாவத்திற்குத் தண்டனை சிறிது தாமதித்தாலும், தண்டனை நிச்சயம் நிறைவேறும் என்பதில் சந்தேகமேயில்லை.

## ஞானமுள்ள ராஜா

*...நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை நீ வேண்டிக் கொண்டபடியால்... உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை **1 இரா. 3 : 11,13** உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல நீயும் என் கட்டளைகளைக் கைக்கொண்டு நட... என்றார் **(1 இரா. 3 : 14)**.*

சாலொமோன் என்றால் சமாதானம் என்று அர்த்தம் (2 சாமு 12 : 25). கர்த்தர் கொடுத்த பெயர் *யெதிதியா* – அர்த்தம் கர்த்தருக்குப் பிரியமானவன்.

பிறப்பதற்கு முன் தேவனால் பெயரிடப்பட்டவர்கள் 7 பேர். அவர்களின் ஒருவன் சாலொமோன் (1 நாளா 22 : 9). நமக்கெல்லாம் நம் பெற்றோர்களால் பெயரிடப்பட்டுள்ளன.

தேவன் தரிசனத்திலே சாலொமோனுடன் என்ன சொன்னார்? உன் தகப்பனாகிய தாவீதைப் போல் என் நியமங்களைக் கைக்கொண்டு நட. கர்த்தரின் எல்லா கட்டளையும் கைக்கொண்டு நடந்தபடியால் தாவீது, என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று தேவன் கூறினார்.

தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் பிறந்த மகன்தான் சாலொமோன். உலகின் மிகச்சிறந்த ஞானி. அவன் ராஜாவாக அரியணை ஏறியதும், சாலொமோனுக்கிருந்த செல்வாக்கு இவ்வளவு என்று அளவிட முடியாது. அவன் நாட்களில் வெள்ளி ஒரு பொருட்டாக எண்ணப்பட்டவில்லை. பூமியிலுள்ள சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்து விளங்கினான்.

நல்ல செல்வாக்கும், அண்டை நாட்டு அரசர்கள், வியாபாரிகள் மூலம் நல்ல செல்வாக்கும் கிடைத்ததால், சாலொமோன் ராஜாவும் பாதை மாறிவிட்டார். செல்வாக்குகள் கிடைக்கும் போது சாதாரண மனிதனே பாதை மாறி விடுவதுண்டு. ஆகவே, கர்த்தருடைய கட்டளை, நியமங்களையெல்லாம் மறந்தார். அளவுக்கு மீறிய செல்வாக்கில் மிதந்தபடியால் எந்த வழியில் நீந்தி கரை சேர்வது என்று சாலொமோனுக்குத் தெரியவில்லை. செல்வாக்கானது கண்ணை மூடிற்று. ஞானம் படுத்து விட்டது. நீதிமொழிகள் (Proverbs), பிரசங்கி (Ecclesiastes), உன்னதப்பாட்டு (Song of Solomon) என்னும் மூன்று புத்தகங்களை எழுதுவதற்கு ஞானத்தோடு காணப்பட்டார் சாலொமோன். "அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழிக்கேற்ப வந்த செல்வங்களையெல்லாம் எப்படி செலவு செய்வது என்று தெரியாமல் பாதை மாறி எங்கே ஒரு ராஜா விழக்கூடாதோ அங்கே விழுந்தார் சாலொமோன்.

## *<u>சாலொமோன் விழுந்தது எங்கே?</u>*

அந்நிய ஜாதியரான அநேகம் ஸ்திரீகள் மேல் ஆசை வைத்தார் (1 இராஜா 11 : 1).

சாலொமோனின் தகப்பனான தாவீது பல பெண்களை மணந்தார் (2 சாமு 3 : 2-5). அதனால் அவரது குடும்பத்தில் பல இன்னல்கள் வந்தன. அவரது மகனாகிய சாலொமோன் அநேகம் பெண்களை மணந்தார். பார்வோன் குமாரத்தி, மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சீதோனியர், ஏத்தியர் போன்ற அந்நிய ஜாதிகளின் பெண்களோடு உறவு கொண்டிருந்தார்.

கர்த்தரின் கட்டளைக்கு எதிராகக் குதிரைகளையும், செல்வத்தையும், பெண்களையும் அதிகமாக சாலொமோன் சேர்த்தார் (உபாக. 17 : 16,17). அவன் இருதயம் பின் வாங்கிப் போகாதபடி, அவன் அநேகம் ஸ்திரீகளோடு உறவு வைத்திருக்க வேண்டாம். சாலொமோன் ஆயிரம் மனைவிகளைக் கொண்டிருந்தான் (700 மனையாட்டிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். (1 இராஜா. 11 : 3). அந்நிய பெண்களை மணந்ததால் அப்பெண்களின் விருப்பங்களுக்கு இணங்கி, கர்த்தரை விட்டு விலகினார்.

## *<u>சாலொமோனின் பெண்கள் செய்த சதிவலைகள்</u>*

அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை தேவனை விட்டு வழுவிப் போகப் பண்ணினார்கள். அவரவர் நாட்டிலுள்ள அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி அவன் உள்ளத்தை, ஆத்துமாவைச் சாயப்பண்ணினார்கள். அவனுடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாய் இருக்கவில்லை. அருவருப்பான அஸ்தரோத்தையும், மில்கோமையும் பின்பற்றினான்.

*நீங்கள் (நாம்) கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில்*

*வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்* (கொலோ. 3 : 1) மேலும் உலகப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கர்த்தருக்கென்று முதலிடம் கொடுப்போம். ஞானியான சாலொமோனே விழுந்து விட்டான் என்றால் நாம் எம்மாத்திரம் என்று நினைக்க வேண்டாம்.

*வேதாகமத்தில் கர்த்தரை விட்டு பாதை மாறியவர்கள்*

ஏவாளினால் வீழ்ந்த ஆதாம்
ராகேலினால் வீழ்ந்த யாக்கோபு
பத்சேபாளினால் வீழ்ந்த தாவீது
தெலீலாளினால் வீழ்ந்த சிம்சோன்
யாகேலினால் வீழ்ந்த சிசெரா
ஆயிரம் பெண்களால் வீழ்ந்த சாலொமோன்

விசுவாசிகளாய் இருக்கும் நாம் விசுவாசிகளையே திருமணம் செய்வது கர்த்தருக்கு உகந்தது. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது? தன்னுடைய வாழ்க்கையின் முக்கியப் பகுதியை நல்லமுறையில் ஆரம்பித்த சாலொமோன், படிப்படியாக பின்மாற்றமடைந்தார். சிறு தவறுகளில் தொடங்கி பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டார். தவறு சிறியதாக இருக்கும் போதே தேவனிடம் அறிக்கையிட்டு விட்டுவிட்டால், கர்த்தர் மன்னித்து வழி நடத்துவார். முடிவு வரை நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (மத். 24 : 13).

சாலொமோனின் பாவத்தைக் குறித்து கர்த்தர் எச்சரித்தார். ஆனால், கர்த்தரின் எச்சரிப்புக்கு சாலொமோன் கீழ்ப்படியவில்லை. கர்த்தர் தனக்காக இல்லாமல் தன்னை நேசித்த ஒரு மனிதனுக்காகவும் (தாவீது) கர்த்தர் செயல்பட்டார். நாம் கர்த்தரை நேசித்தால் நமக்காகவும் செயல்படுவார். சாலொமோனிடமிருந்த இராஜ்யபாரம் கர்த்தரால் பிடுங்கப்பட்டது. மன்னிப்புப் பெறாமலேயே மாண்டுபோன ஞானி சாலொமோன்.

*யூதாவின் ராஜா*

இஸ்ரவேல் தேசத்தை சவுல், தாவீது, சாலொமோன் அரசாண்டார்கள். தேவனுக்குப் பயந்து, தேவனுடைய கட்டளைகளை மற்றும் நியமங்களை மதித்து 40 வருடங்களாக நியாயம் விசாரித்தனர். நான்காவதாக வந்த ரெகொபெயாம் (சாலொமோனின் மகன்) முதியோருடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்த வாலிபர்களின் ஆலோசனைக்கு முதலிடம் கொடுத்து கடினமான உத்தரவை ஜனங்கள் மீது புகுத்தியதால், இஸ்ரவேல் மக்களுக்கும் ரெகொபெயாமுக்கும் பெரிய பிரச்சனை உண்டாகி, இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தை விட்டுக் கலகம் பண்ணி பிரிந்து போனார்கள்.

இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்தது; இஸ்ரவேல் (வடநாடு) யூதா (தென்னாடு) எனப் பிரிந்தது. இந்த யூதாவின் தென்னாட்டுக்கு ராஜாவாக ரெகொபெயாம் இருந்தான். ரெகொபெயாம் துவக்கி சிதேக்கியா (மறுபெயர் மத்தனியா) வரைக்கும் இருபது ராஜாக்கள் யூதா தேசத்தை அரசாண்டதில் தாவீதுக்குப் பின் அரசாண்ட யாவரிலும் சிறந்த அரசராக *எசேக்கியா* விளங்கினார்.

*யார் இந்த எசேக்கியா?*

ஆகாஸ் என்னும் யூதாவுடைய மகன் எசேக்கியா. தாய் ஆபி. மேடைகளைத் தகர்த்த முதல் அரசர். கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் கர்த்தர்மேல் சார்ந்திருக்கும் வாழ்க்கையானது எவ்வளவு பேறு பெற்றது என்று ஆவியானவரால் சாட்சி பெற்றவர் எசேக்கியா. கொள்ளிவாய்ப்

பாம்புகளால் கடிக்கப்பட்ட இஸ்ரவேலர் பிழைப்பதற்காக கர்த்தரின் சொற்படி மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உருவாக்கினார். ஆனால், அந்த சர்ப்பச் சிலையை ஒரு சிலர் வழிபாட்டுப் பொருளாக இஸ்ரவேலர் வழிபட்டு வந்தனர். அந்த வெண்கலச் சர்ப்பச் சிலையையும் உடைத்துப் போட்டார். கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்தார்.

கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கையில் எசேக்கியாவுக்கு ஒரு அருமையான சான்றிதழை கர்த்தர் கொடுத்தார். *எசேக்கியாவுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை (2 இராஜா 18 : 5).*

## *எசேக்கியாவின் ஆயுளை கூட்டியது யார்?*

எசேக்கியாவென்றால் யேகோவாவின் பலம் என்று அர்த்தம். காலங்கள் கடந்து போயின. ஒருநாள் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருந்தான். ஏசாயா தீர்க்கன் மூலமாக தான் மரித்துப் போவோம் என்று எசேக்கியா உணர்ந்தான். எத்தனையோ நன்மைகள் யூதா தேசத்து மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தான். ஆனால், தனக்கு வந்த பிளவை என்ற நோயின் காரணத்தால் நடக்க முடியாமல் படுத்த படுக்கையாயிருந்தான்.

கர்த்தரைக் கூப்பிட்டார், ஜெபித்தார், மிகவும் அழுதார்; எசேக்கியாவின் ஜெபம்;

*...கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும், உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான்... (2 இரா. 20 : 3).*

ஆசா ராஜா செப்பத்தா பள்ளத்தாக்கில் ஜெபித்தார் (2 நாளா 14 : 11). எலியா கர்மேல் மலையில் ஜெபித்தார் (1 இராஜா 18 : 36,37). யாக்கோபு யாப்போக்கு என்னும் ஆற்றின் துறையிலே ஜெபித்தார் (ஆதி. 32 : 22). தானியேல் தன்னுடைய தோழர்களோடு சேர்ந்து ஜெபித்தார் (தானி 2 : 17-19). அனைவரின் ஜெபமும் கர்த்தரால் வெற்றியைக் காணச் செய்தது.

## *எசேக்கியாவுக்கு கர்த்தர் தந்த பதில்*

*...உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன், ...உன் நாட்களோடு பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன்... (2 இராஜா 20 : 5,6).*

பார்த்தீர்களா!! மரணத்தைத் தள்ளிப் போடும் வல்லமை நம் ஆண்டவர் ஒருவரால் மட்டுமே முடியும். பிளவையின் மேல் பற்றுப்போட்ட போது எசேக்கியா பிழைத்தார்.

## *எசேக்கியாவின் செயல்கள் (2 நாளாகமம் அதி. 30, 31)*

தன்னால் செய்ய முடிந்த யாவற்றையும் கர்த்தருக்காக முழுமூச்சுடன் செய்தார். மக்களைக் கெடுக்கும் யாவற்றையும் அகற்றினார் (2 நாளா. 30 : 14; 31 : 1). மக்களுக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் (30 : 19, 20). மக்களோடு சேர்ந்து தேவனைத் துதித்தார் (30 : 23, 24). கர்த்தருடைய பணிக்கென்று தன் ஆஸ்தியிலிருந்து எடுத்துத் தன் பங்கைக் கொடுத்தார் (31 : 3).

விசுவாசிகளாகிய நாமும் இதுபோல் செய்வோமானால் கண்டிப்பாக சபையிலும், ஊழியத்திலும் எழுப்புதல் நடக்கும்.

## *எசேக்கியாவின் விசுவாசம்*

*... அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் (2 நாளா. 32 : 7).*

அசீரியா ராஜாவான சனகெரிப் எருசலேம் மேல் யுத்தம் பண்ண வந்தபோது, எசேக்கியா ஜனத்தின் மேல் படைத்தலைவரை நியமித்து, "திடன் கொண்டு தைரியமாயிருங்கள். சனகெரிப்பின் கூட்டத்திற்கு பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள். நம்முடைய தேவன் நமக்குத் துணை நின்று யுத்தத்தை நடத்துவார்'' என்று சொல்லித் தேற்றினான்.

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கனும், எசேக்கியாவும் சேர்ந்து கர்த்தரை நோக்கி அபயமிட்டார்கள். இவர்களின் கூக்குரலுக்கு கர்த்தர் ஒரு தூதனை அசீரியா ராஜாவின் பாளையத்திற்கு அனுப்பினார். அந்த தூதன் அசீரியா பாளையத்திலிருந்த எல்லோரையும் அதம் பண்ணினான். சனகெரிப் *செத்தமுகமாய்* தன் தேசத்திற்குத் திரும்பினான்.

கர்த்தரையும் ஒரு சிலையைப் போன்று எண்ணி சனகெரிப் பேசியதால், கர்த்தரே யுத்தத்தை நடத்தி *தாம் ஒருவரே உண்மையான தெய்வம் என்பதை வெளிப்படுத்தினார்.*

## *எசேக்கியாவின் மனமேட்டிமை மற்றும் கீழ்ப்படியாமை*

எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும், கனமும் உண்டானது (2 நாளா. 32 : 27-29). பாபிலோன் ராஜா, வியாதியாயிருந்த எசேக்கியாவுக்கு நிருபங்களையும், வெகுமானத்தையும் அனுப்பினான். அதைப் பெற்றுக்கொண்ட எசேக்கியா என்ன செய்தான்? தன் பொக்கிஷ சாலை, ஆயுத சாலைகளைக் காண்பித்தான். தன் அரண்மனையிலும், தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா பாபிலோனியருக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை.

இதனால் கோபமடைந்த கர்த்தர், ஏசாயா மூலமாக எசேக்கியாவிடம் பேசினார். இதோ நாட்கள் வரும். அப்போது ஒன்றும் மீதியாயில்லாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும். உன் பிள்ளைகள் பாபிலோன் அரண்மனையிலே வேலைக்காரராயிருப்பார்கள் என்றான். மனமேட்டிமை எல்லா அழிவுக்கும் காரணமாகும்.

## *அரசர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்*

கர்த்தர் ஒரு தேசத்தை ஒரு மனிதனின் கையில் கொடுக்கிறார் என்றால் அவர் அவனிடம் சில தகுதிகளை எதிர்பார்க்கிறார். தாழ்மை, பொறுமை, ஜனங்கள் மீது பாசம், அன்பு, இரக்கம் கொள்ளுதல், போரில் தலைமையேற்று முன் நடத்துதல், அருகில் உள்ள நாடுகளோடு நல்லுறவு மற்றும் சமாதானமாயிருத்தல், இவையெல்லா–வற்றிற்கும் மேலாக ஜனங்களை கடவுளின் பாதையில் நல்வழிப் படுத்துதல், அதற்கென்று நேரத்தை ஒதுக்குதல், கர்த்தருக்குப் பயந்து வாழ்தல், இப்படி வாழ்ந்து அரசாட்சி செய்தால் தேசம் அமெரிக்கையாய் இருக்கும்.

## *ஒரு அரசனுக்கு இருக்கக் கூடாத குணநலன்கள்*

மனமேட்டிமை, போட்டி, பொறாமை, அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையைக் கேட்டு முடிவெடுத்தல், தான், என்ற அகந்தையோடு வாழ்தல், கர்த்தரின் ஆலோசனை இல்லாமல் குறுக்கு வழியில் முயற்சி செய்வது. இதுபோன்று வாழ்ந்தால் தேசத்தை சரிவர நடத்த இயலாது.

நாமும் நல்ல குணமுள்ளவர்களாக வாழ்ந்து கர்த்தரின் நல் ஆலாசனையைப் பெற்று, கீழ்ப்படிந்து, நாட்களைக் கடந்து செல்ல தேவன் தாமே அருள்புரிவாராக!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**– திருமதி. பேர்ல் குயிலி ராஜா**

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் சுதந்திர தின வாழ்த்துக்கள்!

*''நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாய் இருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது'' (சங்கீதம் 85 : 9).*

நம் இந்திய தேச மக்கள், ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அடிமைப்பட்டு, வறுமையின் உச்சத்திலிருந்த நிலையில், இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தைப் படித்த நம் தேசத் தந்தை காந்தியடிகள், அதில் கவரப்பட்டு, வன்முறையின்றி சுதந்திரம் வாங்க முடியும் என்ற தன்னம்பிக்கையோடு, பல தியாகிகளோடு, இணைந்து நீதியான முறையில் போராடி, நம் தேசத்திற்கு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தார். நல்ல திறமையான தலைவர்களின் கடும் உழைப்பால், நம் நாடும் முன்னேற்றம் அடைந்தது. பல நாடுகள் வியக்கத்தகும் விதத்தில் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. சுதந்திரமாக செயல்பட்டு வருகிறோம். இதற்காக கர்த்தரை துதிப்போம். நாம் பெற்ற சுதந்திரத்தை ஆக்கபூர்வமான வழிகளுக்கு பயன்படுத்துவது ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும். ஒருபோதும் சுதந்திர ஆசீர்வாதத்தை அழிவின் பாதைக்கும், சமுதாய சீரழிவிற்கும், பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். இதே வேளையில் அடிப்படைத் தேவைகள் எதுவுமின்றி, சரியான உணவின்றி, வறுமையில் இருக்கும் மக்கள் பலகோடி. இவர்கள் வாழ்க்கை நிலையை அரசாங்கம் உயர்த்த வேண்டும்; தேவைகள் சந்திக்கப்பட வேண்டும்; மற்றும் பற்பல விதமான அடிமைத்தனத்தின் பிடியில் உள்ள மக்கள் விடுதலை பெற வேண்டும். மது, போதை மருந்து, புகைப்பழக்கம், ஆன்லைன் சூதாட்டம், மாந்திரீகம், பில்லி சூனியம், களியாட்டம், விபச்சாரம் போன்ற சமுதாய சீர்கேடுகளுக்கு அடிமைப்பட்டு, வாழ்க்கையையும், குடும்பத்தையும், சமுதாயத்தையும் சீரழிவுக்கு உண்டாக்கும் தகாத பழக்க வழக்கங்களில் இருந்து விடுதலை பெற வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஊக்கத்துடன் ஜெபிக்க வேண்டியது நம் நாட்டின் உயர்வுக்கு வித்திடுவதாகும். பற்பல அடிமைத்தனத்தின் ஆவி உள்ளவர்கள், இயேசு கிறிஸ்து மூலமாக விடுதலை அடைந்தது வேதாகமத்தின் வாயிலாக அறிய முடியும். ஒரு சிலவற்றை பார்க்கலாம்.

இயேசு கிறிஸ்து ஒரு வீட்டினுள் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனை படுக்கையோடு எடுத்துக் கொண்டு வந்து, அவருக்கு முன்பாக வைக்க வகை தேடினார்கள். ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தபடியால் திமிர்வாதக்காரனை வாசல் வழியாக உள்ளே கொண்டு போக முடியாமல், வீட்டின் கூரையைப் பிரித்து, அவனை படுக்கையோடு மேலேயிருந்து வீட்டினுள் இறக்கினார்கள். திமிர்வாதக்காரனைப் பார்த்து அல்ல, அவனை இறக்கின மனுஷர்களின் விசுவாசத்தைக் கண்டு, இயேசு அவனை குணமாக்கினார். தம்மை சுற்றிலும் உள்ள மனிதர்களில் அநேகர் இந்த திமிர்வாதக்காரனை போல, ஆவிக்குரிய வாழ்விலும் செயலற்று போயிருக்கிறார்கள். நாம் அவர்களை வேத வார்த்தையின் மூலமாகவும், மன்றாட்டு ஜெபத்தின் மூலமாகவும், கர்த்தரிடத்தில் கொண்டு போய் சேர்க்க பிரயாசப்படுவோமாக. அப்பொழுது கர்த்தர் நம்முடைய விசுவாசத்தைக் கொண்டு அவர்களை இரட்சிப்பார். தோமா என்ற இயேசு கிறிஸ்துவுடன் இருந்த சீஷரில் ஒருவர் இந்திய தேசத்திற்கு வந்து நற்செய்தியை அறிவித்து, கேரளாவிலும், தமிழ்நாடு, கன்னியாகுமரியிலும் ஆலயங்கள்

கட்டி, சென்னையில் இயேசுவை குறித்து நற்செய்தி அறிவித்து, இரத்த சாட்சியாக மரித்தார். அதன் விளைவாக, பலர் இயேசுவின் அன்பை உணர்ந்து, ஏற்றுக் கொண்டார்கள். இதைத் தொடர்ந்து வெளிநாட்டு மிஷனெரிகள் இந்திய தேசம் வந்து, நற்செய்தி அறிவித்து, வேதாகமங்களை மொழிபெயர்த்து விநியோகித்து, பள்ளிக்கூடங்களை திறந்து, மருத்துவமனைகளை கட்டி, மக்களின் பற்பல முக்கியமான முன்னேற்றத்திற்குரிய செயல்களை செய்து, நாகரீகம் அடைய வித்திட்டார்கள். தமிழ்நாட்டுக்கு அதிகமான வெளிநாட்டு மிஷனெரிகள் வந்து, உழைத்து தங்கள் குடும்ப வாழ்க்கை முழுவதும் தமிழ் மக்களுக்கு அர்ப்பணம் செய்து, இங்கேயே மரித்தார்கள். அதன்பயனாக இந்திய நாட்டில் இன்று, தமிழகம், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், சாலைகள், காவல்துறை, வேலை வாய்ப்புப் போன்ற எல்லா துறைகளிலும் முதன்மை பெற்று விளங்குகிறது.

தற்போது இது மேலும் உயர்வு பெற்று, பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு உணவு, முதல் உடை, பாட புத்தகங்கள், லேப்டாப், மிதிவண்டி இப்படி அனைத்து வசதிகளும் தமிழகத்தின் முதல்வரின் நல்லாட்சியில் நடைபெறுவது தமிழ் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை நிரூபணமாக்கியுள்ளது. பல நன்மைகளுக்கு வித்திட்ட நம் மிஷனெரிகளின் தியாக வாழ்வை நாம் மனதில் கொண்டவர்களாய், பிறருக்கு நன்மை செய்து, நம்மைப் போல பிறரையும் நேசித்து, தீங்கு செய்பவர்களுக்கு பிரதிபலனாக நன்மை செய்து, இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்தவற்றை செயலில் காட்டி, நம் நாட்டு மக்கள் சமாதான வாழ்வில், முன்னிலை நாடாகத் திகழ வாழ்வோம்! இதற்காக ஜெபிப்போம்!

கடந்த ஜூன் மாதம் 2–ஆம் தேதி IBT நிறுவன தலைவர் Rev, Prof. S. பன்னீர் செல்வம் அவர்களின் 12–ஆம் நினைவு நாளில், கோவை IBT பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள், சிலருடன் IBT அலுவலகப் பணியாளர்கள் இணைந்து IBT அலுவலகத்தில் நினைவு நாள் ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. அவரின் அயராத உழைப்பின், பிரதிபலன்கள் பலவற்றுக்காகவும், துதி செய்து, பல ஜெப குறிப்புகளுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. இதே மாதம் 8–ஆம் தேதியன்று தளவாய்புறம் CSI சபையில் காலை ஞாயிறு ஆராதனையில் ஈரோடு IBT முன்னேற்றப் பணியாளர் சகோ. ராஜன் அவர்கள், துதி ஆராதனை நடத்தினார். IBT செயலர் சகோ. வரமணிராஜ் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்து, ஈரோட்டைச் சேர்ந்த போதகர். தேவ ஆசீர்வாதம் அவர்கள் தேவ செய்தி அளித்தார். சந்தர்ப்பம் அளித்து, காணிக்கைக் கொடுத்த சபை ஆயர், செயலர், பொருளர் மற்றும் பங்கு பெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

இதே மாதம் 14–ஆம் தேதியன்று கோத்தகிரியிலுள்ள CSI St. Luke சபையில் படுகா மொழி புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Device) IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்களால் பிரதிஷ்டை செய்து வெளியிடப்பட்டன. இந்தக் கருவிகள் படுகா போதகர்களுக்கு கொடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் IBT-இன் பொருளாளர், பணித்தள இயக்குனர், சில கோவை, திருப்பூர், பிரதிநிதிகளும், பெங்களூரிலுள்ள WCOI நிறுவனர், இயக்குனர், படுகா மொழிபெயர்ப்பாளர்கள், படுகா சபை போதகர்கள், மற்றும் படுகா மக்கள் திரளாய் இதில் பங்கு பெற்றனர். இவ்வருடத்தில் 7 மாதங்களில் நம்மை தீங்கினின்று விலக்கிக் காத்து, ஆசீர்வதித்த கர்த்தர், மீதமுள்ள 5 மாதங்களையும் நம்மை வழிநடத்தி, ஆசீர்வதிக்க ஜெபிப்போம்!

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்
*K. ஜெய்சிங்*

# உலகச் செய்திகள்

1. IIT கான்பூரில் பட்டப்படிப்பை முடித்து ஓபன் AI நிறுவனத்தில் ஆய்வாளராகப் பணியாற்றிய திரபித் பன்சால் என்ற இந்திய வம்சாவளி இளைஞருக்கு ஆண்டுக்கு ரூ. 853 கோடி (10 கோடி டாலர்) சம்பளத்தில் மெட்டா நிறுவனம் வேலை வழங்கியுள்ளது.

2. இராக் : ஆயுதங்களை ஒப்படைக்கும் குர்து கிளர்ச்சியாளர்கள். துருக்கி அரசை எதிர்தது சுமார் 40 ஆண்டுகளாக ஆயதக் கிளர்ச்சியில் ஈடுபட்டுவந்த குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (பிகேகே) வடக்கு இராக்கில் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

3. பிரதமர் மோடிக்கு கனடா நாட்டின் உயரிய விருதை அந்நாட்டு அதிபர் ஜான் டிராமணி வழங்கினார்.

4. புதிதாக 208 நலவாழ்வு மையங்கள், 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

5. அமெரிக்க வரிச்சலுகை, குடியேற்ற மசோதா நிறைவேற்றம் ஆதரவு 218, எதிர்ப்பு 214.

# “200 மொழிகளில்...” திட்டம்

## தேவனுக்கென்று எடுக்கப்படும் ஒரு தீரமானத் திட்டம்! இந்தியாவை சுவிசேஷமயமாக்கும் திட்டத்தில் ஒரு புதிய கட்டம்!!

*‘‘200 மொழிகளில்...’’ திட்டம் என்றால் என்ன?*

இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு குட்டி பாபேல்! இவைகளில் 5000 ஜனத்தொகையைக் கொண்டதும், வேதாகமமொழிபெயர்ப்பு மிகவும் அவசரமாய், அவசியமாய் இருப்பதுமான மொழிகளின் எண்ணிக்கை 200. இந்த 200 மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் திட்டம் தான் “200 மொழிகளில் திட்டம்”.

*‘‘200 மொழிகளில்...’’ திட்டம் ஏன்?*

“ஏனய்யா! உம்முடைய ஆண்டவர் பெரிய ஆண்டவராயிருந்தால், ஏன் என்னுடைய பாஷையிலே அவர் பேசமாட்டாரா?” என்று கேட்கும் பழங்குடியினரின் கூக்குரலின் எதிரொலிதான் “200 மொழிகளில்...” திட்டம்.

ஆம்! இன்று இயேசு ஒரு பழங்குடியினர் இல்லத்திற்குள் நுழைந்தால், அவர்களுடைய தாய்மொழியில் தானே தன்னுடைய கல்வாரியின் அன்பைக் கூறுவார். நாமும் இயேசுவின் வழியைப் பின்பற்றுவோம்!

*உங்கள் பங்கு!*

200 மொழிகளில் வேதாகமம் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்!

இன்னும் பல கோடி இந்தியர்கள் தேவனுடைய வார்த்தைக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள்!

தாய்மொழி வேதாகமம், உங்களுக்கு மட்டும் தான் உரிமையா?

சிந்திப்பீர்! செயல்படுவீர்!! இன்றே... இப்பொழுதே!!!

- இந்திய திருச்சபை சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை எழுதும் இந்த ‘‘200 வேதாகமமொழிபெயர்ப்பாளர்களில்” ஒருவராக சேர முன்வாருங்கள்!

- “200 மொழிகளில்....” திட்டத்தில் இணைந்து, ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்க தயங்காதீர்கள்!

*ஓரத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தது போதும்! களத்தில் இறங்கி கடமையை நிறைவேற்றுங்கள்!*

*அனைத்து மொழியிலும் மொழிபெயர்ப்போம்! அனைவரது உரிமையையும் பாதுகாப்போம்!!*

# பணித்தளச் செய்திகள்

*<u>மொழிபெயர்ப்பாளர் :</u>*
*<u>சகோதரி. லதா ராமச்சந்திரப்பா</u>*
*<u>மொழி : போவி</u>*
*<u>பணித்தளம் : ஹவேரி (கர்நாடகா)</u>*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மே மாதம் 9-ஆம் தேதி முதல் 14-ஆம் தேதி வரை ஒடிஷா மாநிலம் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடந்த மொழிபெயர்ப்பு சரிபார்ப்புப் பணியில் நானும் கலந்து கொண்டேன். சங்கீதப் புத்தகத்தில் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து திருமதி. கிரிஜா அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதில், சங்கீதம் எழுதிய ஆசிரியர் பெயர், தாவீது அரசரால் உபயோகப்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் பெயர், அடிக்குறிப்பு ஆகியன முடிக்குமாறு கூறினார். அங்கு நிறைவுபெற்று வீட்டிற்கு வந்தபின் இப்பணிகளைச் செய்தேன். சங்கீதம் 1 முதல் 150 வரை முழுவதும் மேற்கூறிய பணிகள் செய்யப்பட்டுள்ளது. இதன்பின் சரிபார்ப்புப் பணியில் சங்கீதம், நீதிமொழிகள் செய்யப்பட உள்ளது. மழையின் காரணமாக புதிய ஏற்பாடு புத்தகங்கள் விநியோகிக்கப்பட முடியவில்லை.

என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>முன்னேற்றப் பணியாளர் :</u>*
*<u>சகோ. மனோனிட்டாசிங்</u>*
*<u>பணித்தளம் : துர்கா நகர்</u>*
*<u>(விசாகப்பட்டினம். A.P.)</u>*

கடந்த மாதத்தில் என் முன்னேற்றப் பணியை நல்ல முறையில் செய்ய கர்த்தர் கிருபையளித்ததற்காக துதிக்கிறேன்.

முன்னேற்றப் பணிக்காக துர்கா நகர், கஞ்சர பாலம், நுவாகடா, R.L. புரம், சஞ்சீவய்யா காலனி, T.I.C. பாய்னட், சீதம்தாரா, M.V.P. காலனி, முஸ்தபா காலனி, அம்பேத்கர் நகர், என்னாடு, நத்தயபளம், ரவீந்திர நகர், பாலாஜி நகர், சின்னகுடில், பாரத் நகர், துட்டகுரு, H.P. காலனி, குருதுவார், ஸ்ரீநகர், சாகர்நகர், ருத்ரபாரி வீதி, பகப்பூர், பாண்டுர்தி, ஹனுமந்வாகா ஆகிய இடங்களுக்குச் சென்றேன். கடந்த மாதத்தில் 15 யோவான் நற்செய்தி புத்தகங்கள், 300 கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. திருமதி. ஜோதி, திரு. ரஹீம், பிரதீப், மகேஷ், ரவிகாந்த், பத்மா மற்றும் பிரசாத் ஆகியோருக்கு நற்செய்தி அறிவித்தேன். சகோதரி ஜோதி, பத்மா மற்றும் சகோ. மகேஷ் ஆகியோரின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>மிஷனெரி : சகோ. சஞ்சய்குமார்</u>*
*<u>பணித்தளம் : சட்டர்ப்பூர்</u>*
*<u>(மத்தியப் பிரதேசம்)</u>*

தேவனுக்கே துதி உண்டாவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக சதானி, மகோபா, சோர்வாய், விஷ்வநாத் காலனி, பாரி கௌதம் நகர், பன்வாடி, சந்த்லா, லாலஞ்சுபூர்வா, சாத்னா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி, இயேசு கிறிஸ்துவின் நற்பணிகள், ஞானஸ்நானம், அவரால் கிடைக்கும் புது வாழ்வு குறித்துக் கூறினேன். முக்கியமாக சந்தித்த சகோதரர்கள்: மான்சிஸ், மகேஷ், பன்லால், ஸ்ரீராம், ராம்ஜி,

ஹைக்பால், ஜன்கி பிரசாத், மகேஷ், தர்மேந்திரா, கன்சுபால், ராகுல் விஷ்வகர்மா, சகோதரிகள்: சிவானி, சீதாபன்சால், குஞ்சா பன்சால், ஊர்மிளா, காஜல், மாலதி பன்சால் ஆகியோர் நற்செய்தியை ஆர்வத்துடன் கேட்டார்கள். இவர்கள் இயேசுவின் அன்பை உணர்ந்து ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

ஞாயிறு ஆராதனை வழக்கம் போல் கௌதம் நகரிலும், இரண்டாவது சனிக்கிழமைகளில் உபவாச ஜெபக்கூட்டம் சட்டர்ப்பூர் பணித்தளத்திலும் தொடர்ந்து நடந்து வருகிறது. என் மிஷனெரிப் பணிக்காகவும், என் மனைவி செய்து வரும் பண்டேலி மொழியில் வேதாகம மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் பிள்ளைகள் ராஜு, கமலா தேவி, இருவரின் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. பால் ஜெயசூதன்*
*பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)*

கர்த்தரின் கிருபையினால் கடந்த மாதம் முழுவதும் திருச்சி பகுதியில் முன்னேற்றப் பணியை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். வெயில் தாக்கம் மற்றும் திடீர் மழை என சில பகுதிக்குச் செல்வது கடினமாக இருந்தது. ஆனாலும், கர்த்தர் பெலப்படுத்தினார். ஒவ்வொரு தாங்குநர்களுக்கும் தொடர்ந்து உற்சாகமாக ஜெபித்தேன். கர்த்தர் கடந்த மாதம் ஜெபித்த காரியங்களுக்கு பதிலை தந்தார். திருமண காரியங்கள், குழந்தைக்காக, உடல் சுகம், பொருளாதாரத் தடை என சில குடும்பங்களில் ஜெபித்த காரியத்திற்கு கர்த்தர் பதிலைத் தந்தார். திரு. பீட்டர் அவர்களுக்கு கர்த்தர் சுகம் கொடுத்தார். திரு. ஐசக் அவர்களுக்கு சுகம் தந்தார். திருமதி. சுகுமாரி அவர்களுக்கு கர்த்தர் சுகம் தந்தார். திரு. பால் ஸ்தேவான் அவர்களுக்கு சுகம் தந்தார். திரு. லில்லி அவர்களுக்கு கர்த்தர் சுகம் தந்தார். திரு. கிறிஸ்டி அவர்களுக்கு கர்த்தர் அற்புதம் செய்தார். ஒவ்வொரு தாங்குநர்களும் தொடர்ந்து உற்சாகத்தோடு தாங்கி வருகிறார்கள். திருமண காரியத்தையும் கர்த்தர் வாய்க்கச் செய்தார். ஒவ்வொரு சபை கமிட்டி உறுப்பினர்களை சந்தித்து முன்னேற்ற கூட்டம் நடத்த அனுமதி கேட்டு வருகிறேன். முடிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு காரியங்களையும் சொல்லி அதற்காக ஜெபிக்க கேட்டு வருகிறேன்.

இன்னும் இந்த ஊழியத்தை விரிவுபடுத்த ஜெபித்து வருகிறேன். எனக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்வார்.

----------•----------

# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u>** கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது; மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

# அம்மாவிற்கு மரியாதை

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் துறைமுகத்தின் நுழைவு வாசலில் நிறுத்தப்பட்டுள்ள சுதந்திர சிலையை - Liberty Statue-வை அநேகர் பார்த்து பாராட்டியிருக்–கிறார்கள். இந்த உலகம் சுதந்திரமாக – சுயாதீனமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அது சித்தரிக்கிறது. அது 'பெட்லோ' என்ற தீவில் நியூயார்க் துறைமுகத்தின் நுழைவாயிலில் நிறுவப்பட்டுள்ளது. இந்த சுதந்திர சிலையை பிரெஞ்சு நாடு 100 ஆண்டுகளுக்கு முன்பு 4 கோடி டாலர் மதிப்புள்ள அச்சிலையை அமெரிக்காவிற்கு பரிசாக கொடுத்துள்ளது.

அந்த சிலையை உருவாக்கிய சிற்பியின் பெயர் – பார்தோல்டி (Bartholdi). அதை உருவாக்குவதற்கு 20 ஆண்டுகள் செலவிட்டார். அந்த சிலைக்கு என்ன உருவம் கொடுக்கப்பட வேண்டும் என்று பலரை ஆலோசனை கேட்டபோது, பலர் பல வித்தியாசமான உருவங்களை சிலையாக வடிக்கும் படியாக ஆலோசனை கொடுத்தார்களாம். பல உலக ஹீரோக்கள், பல நாட்டு வீரர்களின் படங்கள் சிலைக்கு உருவமாக கொடுக்கப்பட்டது.

இறுதியாக இந்த பார்தோல்டி – என்ற சிற்பி தன்னைப் பெற்றெடுத்த தாயின் உருவத்தையே சிலையாக வடிக்கத் தீர்மானித்தாராம். ஆம்! நீங்கள் பார்க்கும் அந்த சுதந்திர சிலை Liberty Statue - சுதந்திர சிலை அதை வடிவம் அமைத்த பார்தோல்டி என்ற சிற்பியின் தாயின் உருவம். அது தாய்க்குலத்திற்கே ஒரு பெரிய பெருமை.

*உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே முதலாம் கற்பனை (எபே. 6 : 3).*

***உங்கள் அம்மாவிற்கு நன்றி செலுத்துங்கள்***

இந்த உலகத்தில் இதுவரை அதிகமான கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து நமது உலகை புது உலகமாக மாற்றிய பெருமை தாமஸ் ஆல்வா எடிசனுக்குத் தான் சேரும். அவர் தனது அம்மாவைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

''நான் இந்த உலகத்தில் பல கண்டு பிடிப்புகளை கண்டு பிடித்தேன். ஆனால் என்னைக் கண்டு பிடித்தது என் அம்மா. என் அம்மா மாத்திரம் கண்டிப்புடனும், அன்புடனும் என்னை சரியான பாதையில் வழி நடத்தாதிருந்தால் என் வாழ்க்கை ஒரு பெரிய தோல்வியாக முடிந்திருக்கும். என் அம்மாதான் என் எல்லா கண்டுபிடிப்புகளுக்கும் காரண கர்த்தா". – தாமஸ் ஆல்வா எடிசன்

உங்களை 10 மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த தாயை மறக்க வேண்டாம். அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை. அவர் அடிதொழ மறப்பவர் மனிதர் இல்லை. ஆண்டவர் நம்மை சிருஷ்டித்தார். ஆனால் நமது தாய் நம்மை உருவாக்கினார்.

யாக்கோபே, உன்னைப் படைத்தவரும், உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் கூறுகிறார், *''நீ என் பார்வைக்கு அருமையான படியினால், கனம் பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன்...'' (ஏசாயா. 43 : 4).*

– "உயிருள்ள உதாரணங்கள்" என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## தேவை

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/- முதல் ரூ. 5,00,000/- வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ திருச்சி மற்றும் சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளர்களுக்கு 2 இருசக்கர வாகனங்கள் தேவைப்படுகின்றன. தற்போதுள்ள பழைய வாகனங்களின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 2,20,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

– பொருளாளர், IBT

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. கடந்த ஜூன் மாதம் 14-ஆம் தேதியன்று திட்டமிட்டபடியே படுகா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் பிரதிஷ்டை மற்றும் வெளியீட்டு விழா அன்று கடும் மழை பெய்யும் என்றும் Red Alert எச்சரிப்பு இருந்தபோதிலும், எல்லோரின் ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் நிகழ்வு முடியும்வரை கோத்தகிரி CSI லூக்கா ஆலயம் பகுதியில் மழை பெய்யாமல் அனுக்கிரகம் செய்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். மொழிபெயர்ப்பாளரிடம் கொடுக்கப்பட்டுள்ள 281 Audio Device-களும் தகுதியானவர்களுக்குக் கொடுக்கப்படவும், வாங்கும் மக்கள் அதை அனுதினமும் பயன்படுத்தி கர்த்தருக்குள் வளரவும் ஜெபியுங்கள்.

2. கடந்த ஜூன் மாதத்தில் திருப்பூரில் 2 ஆலயங்களிலும், தளவாய்புரத்தில் ஒரு ஆலயத்திலும், ஜூலை மாதத்தில் மேட்டூர் டேமில் 3 ஆலயங்களிலும், IBT முன்னேற்றக் கூட்டம் நடத்த கர்த்தர் கிருபை செய்ததற்காக துதியுங்கள். வரும் மாதங்களில் IBT இதுவரை அறிமுகமாகாத சபைகளில் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்க சத்திய வார்த்தைப் பத்திரிகை வாசகர்களும் உதவி புரிய ஜெபியுங்கள்.

3. இம்மாதம் 4-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை IBT மையம் கோவையில் மிர்கான், கலகாண்டியா, தெஷியா (ஒடிஷா), போஜ்புரி (உ.பி.) மொழிகளின் மொழிபெயர்ப்பாளர்கள் பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணி மற்றும் சரிபார்ப்பிற்கும், மத்தியப் பிரதேசத்திலிருந்து பண்டேலி மொழிபெயர்ப்பாளர் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் பணிகளுக்காகவும், சரிபார்ப்பிற்காகவும் வருகிறார்கள். பண்டேலி மொழி சரிபார்ப்புச் செய்ய, BSI பெங்களூரிலிருந்து Rev. Dr. சுப்ரமணி அவர்களும் வர இருக்கிறார். இவர்களின் பாதுகாப்பான வழிப்பயணத்திற்கும், இங்கிருக்கும் நாட்களில் அவரவர் மொழியிலுள்ள பணிகள் துரிதமாக முடிக்கப்படவும் ஜெபியுங்கள்.

4. கடந்த ஜூன் மாதம் 12-ஆம் தேதியன்று அகமதாபாத்திலிருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் அங்குள்ள மருத்துவக் கல்லூரி விடுதி கட்டிடத்தில் மோதி மாபெரும் விபத்து ஏற்பட்டதினால் விமானத்திலுள்ள 241 பேரும், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்தவர்கள் 25 பேரும் மரணமடைந்த நிகழ்வு நம் நாட்டை மட்டுமின்றி உலக மக்கள் அனைவரையும் அதிர்ச்சியிலும், சோகத்திலும் ஆழ்த்தியது. உறவுகளைப் பிரிந்து துயரத்திலுள்ள குடும்பத்தினருக்கு கர்த்தர் ஆறுதலையும், சமாதானத்தையும் அருளவும், காயமடைந்தவர்கள் குணமடையவும் ஜெபியுங்கள்.


## SEND ALL YOUR CONTRIBUTIONS

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBINO282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by On behalf of | **Mr. K. JAISINGH** **WORD PUBLISHERS TRUST** 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH** Chandra Prabha Press 113-118, V.H. Road, CBE-1. |

**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd August 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**